# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண் 9475/விசாரணை/2009</u>

<u>கோவையில் விசாரணை நடைபெற்ற நாள் 18-9-2009</u>

| | |
|---|---|
| முன்னிலை: | திரு ஜி. இராமகிருஷ்ணன, இ.ஆ.ப.(ஓ.)<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு ஆர். இரவிகுமார், 76, சேரன் நகர் - **II,**<br>மேட்டுப்பாளையம் - 641 301. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர், தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மேட்டுப்பாளையம் சாலை, கோயமுத்தூர் - 641 043. |

*****

இவ்வழக்கின் இன்றைய (18-9-2009) விசாரணைக்கு மனுதாரரும் பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலரும் வந்திருந்தனர்.

மனுதாரர் தன்னுடைய 20-10-2008 தேதியிட்ட மனுவின் மூலமாக பொதுத் தகவல் அலுவலரிடம் கேட்ட 18 கேள்விகளுக்கு பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து 4-11-2008 அன்று பதில் பெற்றுள்ளார். அதே போன்று 19-1-2009 நாளிட்ட கடிதத்தின் மூலமாக எழுப்பியுள்ள கேள்விகளுக்கு 18-2-2009 நாளிட்ட கடிதத்தின் மூலமாகத் தகவல்கள் பெற்றுள்ளார். வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மனுதாரர் ஆணையத்திடம் புகார் செய்தார்.

மாநிலத் தகவல் ஆணையத்தைப் பொறுத்தவரையில், உள்ளது உள்ளவாறாகத் தகவல்களைப் பெற்றுத் தருவதுதான் ஆணையத்தின் நோக்கம். வழங்கப்பட்ட தகவல்களின்படி அலுவலகத்தின் நடைமுறைகள் உள்ளனவா என்பது இந்தச் சட்டத்தின் பார்வைக்கு வராது. அதற்கு சம்பந்தப்பட்ட துறை உயர் அலுவலர்கள் மூலமாகத் தீர்வு காணவேண்டும்.

மனுதாரரர் விசாரணையின்போது ஒரு குறுந்தகடை ஆணையத்திற்கு அளித்து, மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் பல்வேறு

மனுக்களைப் போட்டு தகவல்கள் பெறுகின்றபடியால் தன்னை அச்சுறுத்தி வேண்டுமென்றே குறுகிய நோக்கத்தில் தான் பணிமாற்றம் செய்யப்பட்டதாகவும், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்களைப் பெறுகின்ற வழக்கத்ததைத் தான் கைவிடவேண்டுமென்றும், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டுமென்றும் பொதுத் தகவல் அலுவலர் உள்ளிட்ட சில அலுவலர்கள் தன்னுடன் பேசிய பேச்சு அந்தக் குறுந்தகட்டில் உள்ளது என்று புகார் செய்துள்ளார். மனுதாரரது புகாரில் ஏதேனும் உண்மையிருப்பின், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்று மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின்போது மனுதாரர் அளித்துள்ள இந்தக் குறுந்தகட்டில் கண்டுள்ள விவரங்களை கணினியின் முலமாக கேட்டறிந்து தகுந்த மேல் நடவடிக்கைக்கு உரிய பரிந்துரைகள் செய்யுமாறு இவ்வாணையத்தின் பதிவாளர் பணிக்கப்படுகிறார்.

மாநில தகவல் ஆணையம்

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 8.10.09**
**ஆணையத்தின் ஆணைப்படி** **உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண் 9475/விசாரணை/2009</u>
பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
37, மேட்டுப்பாளையம் சாலை,
கோயமுத்தூர் - 641 043.

<u>வழக்கு எண் 9475/விசாரணை/2009</u>
பதிவாளர்,
தமிழ் நாடு தகவல் ஆணையம்,
சென்னை – 600 018. (குறுந்தகடுகளுடன்)

<u>வழக்கு எண் 9475/விசாரணை/2009</u>
திரு ஆர். இரவிகுமார்,
76, சேரன் நகர் - **II,**
மேட்டுப்பாளையம் - 641 301.